SACRED HEART COLLEGE (AUTONOMOUS)
Tirupattur - 635 601
Tamil Nadu, India.
புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
Vol: 08, Issue : Special
SACRED HEART RESEARCH PUBLICATIONS
March 2025
ISSN: 2456-821X

# 28. TML1167 - புறநானூற்றில் மகளிர் மாண்புகன்

முனைவர் கோ.மாரியம்மாள்,
உதவிப்பேராசிரியார்,
தமிழ்த்துறை, வேளாளர் மகளிர் கல்லூரி (தன்னாட்சி), ஈரோடு.12

**ஆய்வுச் சுருக்கம்**

*சங்க காலம் தமிழ் இலக்கிய வரலாற்றின் பொற்காலம். புண்ணிய பூமியாகிய இப்பாரத கண்டமானது வீர செயல்களுக்கு பேர் போன பூமியாக விளங்கியது.அது அந்நாளில் தோன்றிய தாய்மார்களின் பெருமையாகும். முலைப்பாலோடு வீரமும் தியாகமும் கலந்து ஊட்டப்பட்டால் அது என்றும் அழியாமல் உறுதி பெறும் என்பது அவர்களின் எண்ணமாக இருந்தது. எனவே தான் தொகை நூலான புறநானூற்றில் வீரசுவை மிகுந்து காணப்படுகின்றது. ”தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும்” என்பதற்கு ஏற்ப அக்காலத்தில் புலவர்கள் கற்ற கல்வியானது உலகத்தார் கண்முன்னே உயர்ந்து நிற்கின்றது. வீர பெண்களின் பெருமையை புகழ்ந்த புறநானூற்றில் மகளிரின் வீர உணர்வு ,கல்வி, வாழ்க்கை, நாட்டுப்பற்று, மகளிர் செய்யும் தொழில், விளையாட்டு போன்றபெண்ணின் மாண்புகளை வெளிக்கொணர்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும் .*

**திறவுச்சொற்கள்**

மகளிர் வீரம்

கல்வி

நாட்டுப்பற்று

தொழில்

விளையாட்டு

**முன்னுரை**

*தொன்மை காலந்தொட்டுத் தமிழ் சமுதாயம் மகளிர்க்கு பெரிதும் மதிப்பு தந்து வந்துள்ளது. மகளிரின் நிலை மிகவும் போற்றப்படுவதாக இருந்தது. ஆண்களுக்கும் பெண்களுக்கும் சம உரிமை இருந்தது .அக்காலத்தில் பெண்களும் கல்வியில் சிறந்து விளங்கினர். பெண்கள் நாட்டுப்பற்று உடையவர்களாகவும் இல்லற சிறப்பிற்கு உற்ற துணையாகவும் இருந்து வந்துள்ளனர். பண்டைய தமிழ் இலக்கியம் காதலையும் வீரத்தையும் கூறுகின்றது புறநானூற்றில் தமிழ் பெண்களின் வீரவாழ்க்கை இயல்பு தொழில் போன்றவை சிறப்பாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது .சங்ககாலத்தில் பெண்களுக்கு உயர்ந்த மதிப்பு இருந்ததை சங்க இலக்கியங்கள் எடுத்துரைக்கின்றன. புற வாழ்க்கையிலும் அக வாழ்க்கையிலும் போற்றத் தகுந்த நிலையில் இருந்தனர் .*

**மகளிர் வீர உணர்வு**

*நரம்புகள் மேலே தோன்றி வற்றிய தோள்களையும் தாமரை இலை போன்ற அடிவயிற்றை உடைய ஒரு வயது முதிர்ந்த பெண் ஒருத்தியிடம் உன் மகன் பகைவரின் படையை கண்டு அஞ்சி புறமுது கொடுத்து மாண்டான் என்று பலர் வந்து கூறும் போது அப்பெண்ணானவள்அப்போருக்கஞ்சி பிறந்திருந்தால் அவனுக்கு உயிர் கொடுத்த என் மார்பை அறுத்து எறிவேன் என்றாள்.விழுப்புண்பட்டு இருந்த தன் மகனை பார்த்தவுடன் அவனைப் பெற்ற நாளைவிட மிக மகிழ்ச்சியடைந்தாள் என்பதனை*

”நரம்பு எழுந்து உலறிய நிரம்பா மென்தோள்
முளறி மருங்கின் முதியோர் சிறுவன்

--- ------ – – --- --- ------------

முலை அறுத்திடுவென் யான் எனச் சினை இக்
கொண்ட வாளோடு படுப்பிணம் பெயராச்
செங்களம் துழவுகோள் சிதைந்து வேறாகிய
படுமகன் கிடக்கை காணுஉ
ஈன்ற ஞான்றினும் பெரிது உவந்தனனே '' – (புறம் – 278)

*இப்பாடல் வரியானது ஒரு பெண்ணின் வீரத்தை புலப்படுத்துகின்றது.*

*சங்க காலத்தில் போர் செய்வதற்கு ஆண்களே அதிகமாக தேவைப்பட்டனர். எனவே பெண்கள் தமக்கு ஒரு பெண் குழந்தை பிறப்பதை விட ஆண் குழந்தை பிறப்பதையே விரும்பவும் செய்தனர் .பெருமையாகவும் கருதினர் .அதனையே தலையாக கடமையாகவும் கருதினர். வீர மகளிர் வீட்டுக்கு ஒரு மகனை நாட்டிற்கு அனுப்புவதில் பெருமை கொண்டனர். பெண்கள் வீரரின் மனைவியாக மட்டுமல்லாமல் ஒரு வீரத் தாயாகவும் கருதப்பட்டாள். பெண்பாற்புலவர்கள் வீர பெண்மணிகளின் உணர்வினை தம் பாடல்களின் மூலம் மெருகேற்றியுள்ளதை உணரமுடிகின்றது.*

**நாட்டுப்பற்று**

*சங்க கால பெண்கள் நாட்டுப்பற்று உடையவர்களாக விளங்கினர். பகைவரிடமிருந்து தன் நாட்டைக் காக்க நாட்டுப்பற்று அனைவரது உள்ளத்திலும் பற்றாத அருவியாகவே பொங்கி பரிணமித்தத்து எனலாம். எனவேதான் தன்மகன், கணவன் ஆகியோரை போர்க்களத்திற்கு அனுப்புவதையும் நாட்டிற்காக போரிட்டு போர்க்களத்தில் இறந்து படுவதையும் பெருமையாக கருதினர். இதனை திருவள்ளுவர்*

''ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனை
சான்றோன் எனக் கேட்ட தாய்'' – குறள்– 69

*தன் மகனை பெற்ற இன்பத்தை விட பிறரால் சான்றோன் என பாராட்டும் போது பெருமை அடைவதை இக்குறளானது விளக்குகின்றது.*

**வாழ்க்கை கல்வி**

*மனித வாழ்வினை மேம்படுத்தி நல்ல ஒழுக்கத்தையும் அறிவையும் தரக்கூடியது கல்வி.அக்கல்விக்கு சிறந்த இடம் சங்க காலத்தில் கொடுக்கப்பட்டிருந்தது. பெண்களுக்கு வாழ்க்கை கல்வி மிகச் சிறப்பானதாக இருந்தது. தாய், தந்தை ,அரசன், மகன் முதலியவர்களுக்குரிய கடமைகளை பொன்முடியார்.*

''ஈன்று புறந்தருதல் என் தலை கடனே
சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே
வேல் வடித்துக் கொடுத்தல் கொல்லருக்கு கடனே
நன்னடை நல்கல் வேந்தருக்கு கடனே
ஒளிறுவாள் அருஞ்சமம் முருக்கிக்
களிறு எரிந்து பெயர்தல் காளைக்கு கடனே '' – (புறம் –312)

*என்னும் பாடல் வரியானது வீரம் உடைய பெண்ணின் மனநிலையை வெளிப்படுத்துகிறது.” என்றலைக்கடனே” என்பதன் மூலம் பொன்முடியார் தம்மை தாயாகவே பாவித்து பாடியுள்ளதையும் அறிய முடிகின்றது.*

*சங்க காலத்தில் ஆண்களுக்கு இணையாக பெண்களும் கல்விகற்றிருந்தனர் . ஔவையார், பொன்முடியார் நெட்டி யம்மையார், அள்ளூர் நன்முல்லையார் ,வெண்ணி குயத்தியார் ,நக்கணையார் ,காவற்பெண்டு ,தாயம் கண்ணியார், மாற்பித்தியார், அடைநெடுங்கல்வியார் ,மாரோக்கத்து நப்பசலையார் போன்ற பெண்பாற்புலவர்கள் கல்வியில் சிறந்து விளங்கினர் . சங்க இலக்கியத்திலேயே அளவு கடந்து கல்வியால் பெருஞ்சிறப்பு பெற்று கல்வியாலையே பெயர் வழங்கப்பெற்ற ஒரே புலவர் அடை நெடும் கல்வியாராவார் அடைநெடுங்கல்வியார் என்னும் புலவரின் பெயர் கல்வியால் பெற்ற சிறப்பு பெயராகவே ஊகிக்க முடிகின்றது.*

**மகளிர் தொழில்கள்**

*பழங்கால மக்கள் பல தொழில்களையும் செய்து வந்துள்ளனர். அவற்றில் பெண்களும் சிறு சிறு தொழில் செய்து வந்துள்ளனர் .மக்கள் வாழும் நிலத்திற்கு ஏற்ப அவர்களுடைய தொழிலையும் பகுத்துக் கொண்டுள்ளனர் .ஐந்திணை அடிப்படையில் வாழ்ந்த மகளிர் பல்வேறு தொழில்களை செய்துவந்துள்ளனர் .பொழுது புலரும் முன் அதிகாலை பறவைகளின் ஒலி கேட்டு அதிகாலையில் பெண்கள் தயிர் கடைந்து வந்துள்ளனர். முல்லை நில மக்கள் தங்கள் வீடுகளில் கடைந்த தயிரை குறிஞ்சி நிலத்தில் கொண்டு விற்று குறிஞ்சி நில வேட்டுவன் வேட்டையாடிய மான் கறியினை பெற்றாள் என்பதனை*

''—————————————— வேட்டுவன்

மான் தசை சொறிந்த வட்டியும் ஆய்மகள்
தயிர் கொடு வந்த தசும்பும்'' – (புறம் –33 )

*என்ற பாடலடியானது உணர்த்துகின்றது . ஒரு பொருளை கொடுத்து அதற்கு பதிலாக வேறு பொருளை வாங்கும் பண்டமாற்று முறை நடந்திருப்பதையும் அறிய முடிகிறது.*

*ஏரினால் உழுது வாழும் உழவர் வீட்டில் வாழும் மகளிர் நெற்களத்திலிருந்த வெண்ணெல்லை முகந்து தருவர். அதனைப் பெற்றுக்கொண்டு தன் இடத்திற்கு ஆண்கள் செல்வர். பெண்கள் தெய்வத்திற்கு நிகராக அக்காலத்தில் கருதப்பட்டனர்*

*கவைத்த கதிரையுடைய வரகினை குற்றி வடித்த சோற்றோடு அரும்புடனே தழைத்த வேளைச் செடியின் வெண்மையான பூவை தயிரிலிட்டு சமைத்து புளித்த கூழையும் உண்டனர் என்பதை*

''கவைக்கதிர் வரகின் அவைப் புறுவாக்கல்
தாதெருமற றுகின் போதோடு பொதுளிய
வேளை வெண்பு வெண்தயிர் கொளிஇ
ஆய்மகள் அட்ட அம்புளி மிதவை'' – (புறம் – 215 )

*இயற்கையான முறையில் விளைந்த பொருட்களை கொண்டு உணவு தயாரித்தல் போன்ற தொழிலை செய்து ஆண்களின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்துள்ளனர் என்பதை அறிய முடிகின்றது.*

*சமைக்கும் பெண் எடுத்துக் கொணர்ந்த அளக்கப்படாத வெண்ணெல்லை பூணிட்ட உலக்கையால் குற்றி அதனால் உண்டான அரிசியால் சோறாக்கினர். மாமரத்தின் கனியை பிசைந்து குழம்பாக்கினாள் சுறா மீனை குழம்பாக சமைத்தாள் அவ்வாறு சமைத்த உணவினை நெற்களத்தில் வேலை செய்யும் ஆண்களுக்கு கொடுத்தாள் அதனை உண்ணாமல் அவ் ஆடவர் மது உண்டு கழித்தனர் என்பதை*

''அடுமகள் முகுந்த அளவா வெண்ணல்
தொடிமாண் உலக்கைப் பரூஉக் குற் றரிசி
காடி வெள்ளுலைக் கொளிஇ நீழல்
ஓங்கு சினை மாவின் தீங்கனி நறும்புளி'' – (புறம் –399)

*பெண்கள் நெற்குற்றல் தொழில் செய்து வந்துள்ளனர் என்பதையும் பெண்களின் உழைப்பிற்கு ஆண்கள் முக்கியத்துவம் கொடுக்கவில்லை என்பதையும் இப்பாடலின் மூலம் அறிய முடிகின்றது*

*சங்க காலத்தில் குடும்பமாக வாழும் பெண்கள் பூ விற்றல் தொழிலை செய்து வந்துள்ளனர் .போருக்கு செல்லும் ஆண்மகனின் வீட்டில் உள்ள மகளிர் மலரை சூட மாட்டாள் என்று எண்ணி பூவிற்கும் பெண்கள் மற்ற மகளிர் வாழும் இல்லங்களுக்குச் சென்று பூ விற்கிறாள். பூவிற்கும் மகளிர் ஒருத்தி வீரர் வாழ்கின்ற தெருவில் புகாமல் பிறர் தெருவில் சென்றதற்கான காரணத்தை*

''அளியல் தானே பூ விலை பெண்டே'' – (புறம் –293)

*சங்க காலத்தில் பெண்கள் தம் கணவர்களுக்காகவே தம்மை அழகுபடுத்திக் கொண்டனர் என்பதை இப்பாடல் அடியானது உணர்த்துகின்றது.*

**மகளிர் விளையாட்டு**

*சிலம்பும் வளையும் அணிந்த இளம் மகளிர் பொன்னால் செய்த கழற்காய் கொண்டு வீட்டுத் திண்ணைகளிலும் மணல்மேடுகளிலும் விளையாடினர்.என்பதை*

''செறியறிச்சிலம்பின் குறுந்தொடி மகளிர்
பொலஞ்செய் கழங்கின் தெற்றி ஆடும்
தண்ணான் பொருநை வெண்மலை சிதை'' – (புறம் –36 )

*வெண் மணல் சிதையும் படியாக இளமகளீர் விளையாடியதை அறிய முடிகிறது .*

*மேலும்*

''ஓரையாயத் தொண்டொடி மகளிர்'' – (புறம் – 176)

*மகளிர் ஓரை என்னும் விளையாட்டினையும் விளையாண்டுள்ளனர். மென்மையான மயிரையுடைய முன் கையில் தூய அணிகலன்களை அணிந்த இளம் பெண்கள் மணலில் சிறிய வீடுகள் கட்டி அதில் அமைந்த பாவைக்கு மரத்தின் கிளையிலுள்ள மலரை பறித்து இம்மலரைச் சூட்டிதெளிந்த ஆண் பொருநை ஆற்று நீரில் பாய்ந்து விளையாடினர்.*

"வால் இழை மடமங்கையர்
வரிமணற் புனை பாவைக்குக்
குலவுசினைப் பூக்கொய்து
தண் பொருநைப் புனல் பாயும் " – ( புறம் –11 –2–5)

*என்பதை புறநானூற்று பாடல் அடி தெளிவுபடுத்துகிறது.*

*இதுபோன்று பல்வேறு வகையான விளையாட்டுகளை புறநானூற்றில் மகளிர் விளையாடி மகிழ்ந்துள்ளனர். இவ்வாறு விளையாடுவதன் மூலம் அவர்களுக்குள் ஒற்றுமையையும் மன உறுதியையும் பெறுகின்றனர் என்பதே அறிந்து கொள்ள முடிகின்றது.*

**முடிவுரை**

*சங்க கால சமுதாய நிலை மகளிர் நாட்டின் மீது கொண்ட பற்று காரணமாக வீர உணர்வுடன் திகழ்ந்தனர் .ஆடவரைப் போல கல்வியிலும் விளையாட்டுக்களிலும் தொழிலிலும் ஈடுபட்டுள்ளனர். மகளிர் தான் கொடுக்கும் பொருள்களுக்கு பதிலாக மாற்றுப் பொருளை பெற்று பண்டமாற்று முறையை மேற்கொண்டுள்ளனர் .திருக்குறள் காலத்தில் இருந்த வீரம் கல்வி முறையை புறநானூற்றிலும் காண முடிகிறது பிள்ளைப் பேற்றின் இன்றியமையாமை அதன் பயன் அவனைப் பெற்ற தாயின் வீரம் போன்ற கருத்துக்களை புறநானூறு புலப்படுத்துகின்றன.*

**துணைநூற்பட்டியல்**


1. புறநானூறு மூலமும் உரையும்,
   முனைவர் கு.வே .பாலசுப்பிரமணியம்,
   நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்( பி)லிட் .அம்பத்தூர்,
   சென்னை– 98 .

2. புறநானூறு ஆய்வுகள்,
   நைசி. கரிகாலன் ,
   தமிழ் இலக்கியத்துறை,
   சென்னை பல்கலைக்கழகம் ,
   நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி)லிட் அம்பத்தூர் சென்னை 98.

3. புறநானூறு மூலமும் உரையும், .
   அவ்வை சு.துறைசாமி,
   கழக வெளியீடு.